# சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை 2019-2020 ஆம் நிதி ஆண்டு ஆண்டு அறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-இல் ஆணையிடப்பட்டவாறு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 535/எம்.2/2017, நாள். 26.10.2017-இன்படி சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளை பத்திரமானது 01.11.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண். BKIV/36, நாள்.01.11.2017-இன்படி சிவகங்கை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், சிவகங்கை | 1 | மாவட்ட ஆட்சியர், சிவகங்கை. |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர், சிவகங்கை. | 2 | மாவட்ட வருவாய் அலுவலர், சிவகங்கை. |
| 3 | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சிவகங்கை. | 3 | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சிவகங்கை. |
| 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சிவகங்கை. | 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சிவகங்கை. |
| 5 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) | 5 | துணை இயக்குநர், சுகாதாரபணிகள், சிவகங்கை. |
| 6 | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), சிவகங்கை. | 6 | முதன்மைக் கல்வி அலுவலர், சிவகங்கை. |
| 7 | மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், சிவகங்கை. | 7 | மாவட்ட கருவூல அலுவலர், சிவகங்கை. |
| 8 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், சிவகங்கை. | 8 | மாவட்ட சமூக நல அலுவலர், சிவகங்கை. |
| 9 | மாவட்ட வன அலுவலர், சிவகங்கை. | 9 | உதவி இயக்குநர் (ஊராட்சிகள், சிவகங்கை. |
| 10 | முதன்மைப் பொறியாளர், (பொ.ப.து./ நீ.ஆ.அ), சிவகங்கை | | |
| 11 | உதவி இயக்குநர், நில அளவை பதிவேடுகள் துறை, சிவகங்கை. | | |
| 12 | மாவட்ட கருவூல அலுவலர், சிவகங்கை. | | |
| 13 | மாவட்ட சமூக நல அலுவலர், சிவகங்கை. | | |
| 14 | துணை இயக்குநர், சுகாதாரபணிகள், சிவகங்கை. | | |
| 15 | இணை இயக்குநர், விவசாயம், | | |
| 16 | ஆய்வாளர், தொழிலாளர் நலத்துறை), சிவகங்கை. | | |

2) சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, பாரத வங்கிக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண். 37301947887) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்டகனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

3) சிவகங்கை மாவட்டத்தில் 1 பெருங்கனிம குவாரியும், 17 சிறுகனிம குவாரி உரிமங்கள் நடப்பிலுள்ளன. இவற்றில் 09 சிறுகனிம குவாரி மற்றும் 01 பெருங்கனிம குவாரி குத்தகை உரிமங்கள் 12.01.2015 தேதிக்கு முன்னர் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள 08 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்கள் 12.01.2015 தேதிக்கு பின்னர் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

4) சிவகங்கை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.3.2020 வரை வங்கி கணக்கில் ரூ.2,65,76,668/- (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தைந்து இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்து எட்டு மட்டும்) இருப்பில் உள்ளது.

5) 2019-2020 ஆம் நிதியாண்டில் சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக ரூ. 65,39,427/- மதிப்பிலான கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தும் அமைப்பு | உயர் முன்னுரிமையா / பிறமுன்னுரிமைத் திட்டமா |
|---|---|---|---|---|---|
| 1. | முதியோர் மற்றும் ஊனமுற்றோர் நலன் | முதியோர் மற்றும் ஊனமுற்றோருக்கான மடிக்கக்க கூடிய 145 சக்கர நாற்காலி, சிவகங்கை. | 8,56,950/- | மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலகம், சிவகங்கை. | பிறமுன்னுரிமைத் திட்டம் |
| 2. | கல்வி | இந்து வார இறுதி நாளிதழ் 600 நகல்கள் 52 வாரங்கள் சிவகங்கை மாவட்ட அரசு உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள். | 7,80,000/- | முதன்மைக் கல்வி அதிகாரி, சிவகங்கை. | பிறமுன்னுரிமைத் திட்டம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | கல்வி | இளம் உலக சிறுபத்திரிக்கை நாளிதழ் 600 நகல்கள் 52 வாரங்கள் சிவகங்கை மாவட்ட அரசு நடுநிலைப்பள்ளிகள். | 3,12,000/- | முதன்மைக் கல்வி அதிகாரி, சிவகங்கை. | பிறமுன்னுரிமைத் திட்டம் |
| 4. | தூர்வாரும் பணி | சிவகங்கை மாவட்டத்திலுள்ள பாலாறு, உப்பாறு, மணிமுத்தாறு மற்றும் பிற ஆறுகளிலுள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றும் பணி. | 29,84,413/- | செயற்பொறியாளர், சருகனியாறு/ மணிமுத்தாறு வடிநிலக் கோட்டம், சிவகங்கை/தேவகோட்டை. | பிறமுன்னுரிமைத் திட்டம் |
| 5. | தூர்வாரும் பணி | சிவகங்கை மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு மற்றும் பாலாறு பகுதிகளிலுள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றும் பணி. | 2,36,169/- | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சிவகங்கை. | பிறமுன்னுரிமைத் திட்டம் |
| 6. | கல்வி | மேதகு டாக்டர். A.P.J. அப்துல்கலாம் அவர்களின் புத்தகம் "என்கல்வி திருக்குறள்" சிவகங்கை மாவட்ட அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகள். | 11,02,000/- | முதன்மைக் கல்வி அதிகாரி, சிவகங்கை. | பிறமுன்னுரிமைத் திட்டம் |
| 7. | கல்வி | தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக 6 தொலைநோக்கிகள் சிவகங்கை மாவட்டதில் இரண்டு தொகுதிகளுக்கு சிவகங்கை மாவட்ட அரசு உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள். | 2,67,895/- | | |
| மொத்தம் | | | 65,39,427/- | | |

2019-2020 ஆம் நிதியாண்டில் சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக கீழ்க்கண்ட பிற செலவினங்களுக்காக ரூ. 1,97,08,782/- செலவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | செலவின விவரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | 2019-2020 நிதியாண்டில் சென்னை புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அலுவலக செலவினங்களுக்காக 1% தொகை வழங்கப்பட்டது. | 51940 |
| 2. | Apple I Pad, Elcot நிறுவனம் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டது | 97724 |
| 3. | 2% வருமான வரிப் பிடித்தம் | 117620 |
| 4. | விவசாயத் துறை சார்ந்த செலவினத் தொகை | 881780 |
| 5. | சுகாதாரத்துறை தொடர்பான செலவினத் தொகை. | 123500 |
| 6. | நீர்நிலைகளைத் தூர்வாரும் பணி மற்றும் ஜே.சி.பி ஓட்டுநர்களுக்கு ஊதியம். | 16878112 |
| 7. | சீமைக் கருவேல மரங்களை அகற்றும் பணி. | 388152 |
| 8. | இதர செலவினத் தொகை | 1153955 |
| 9. | வங்கி கட்டணத் தொகை | 16000 |
| **மொத்தம்** | | **19708782/-** |

சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளையின் 2019-2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு கணக்குள் மத்திய அரசால் அங்கிகரிக்கப்பட்ட பட்டய கணக்காளர் VSK and Associates, காரைக்குடி மூலம் தணிக்கை செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையானது சிவகங்கை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை முன்பு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

தலைவர்,
சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை /
மாவட்ட ஆட்சித் தலைவர்,
சிவகங்கை.